**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**SOP No.3/2025**

**வாக்குமூலம்: ம.சா.1 – மாரிமுத்து**

**15.06.2026 : சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் தான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன். நான் தான் நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு விபரம் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது சின்னம்மா அவர்கள் எதிர்மனுதாரர் வங்கியில் வைப்பீடு செய்துள்ள பணத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் எனது சின்னம்மா அவர்களின் வாரிசு அடிப்படையில் மேற்படி பணத்தை கேட்கிறேன் என்றால் சரிதான். நான் கடந்த 27.12.2019 ஆம் தேதி எதிர்மனுதாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன். அந்த அறிவிப்பில் உள்ள விபரம் நான் சொல்லி தயார் செய்தது தான். கடந்த 27.12.2019 ஆம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. நான் மேற்படி அறிவிப்பில் வள்ளியம்மாள் எனக்கும், எனது அண்ணன் மனைவி தமிழரசி ஆகிய இருவர் பெயரில் கடந்த 20.01.2000 ஆம் தேதி உயில் எழுதி வைத்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன். மேற்படி உயிலில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். மேற்படி உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். மேற்படி உயிலின் படி பழனி டவுன், பிளாக் எண்.1, வார்டு எண்.3, அம்பளகாரர் தெரு, டவுன் சர்வே எண்.331ல் 318–3/4 சதுரடி உள்ள வீட்டை சுவாதீனம் அடைந்து அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி உயிலை வைத்து தான் எனது பெயரில் பட்டா பெற்றுள்ளேன் என்றாலும், மேற்படி வீட்டிற்கு சொத்துவரி, குடிநீர் வரி, மின் கட்டணம் என் பெயரில் மாற்றியுள்ளேன் என்றாலும் சரிதான்.

3. வள்ளியம்மாள் என்பவர் எதிர்மனுதாரர் வங்கியில் மொத்தம் எத்தனை வைப்பீடு வைத்துள்ளார்கள் என்றால் நான்கு வைப்பீடு கணக்குகள் வைத்துள்ளார்கள். வள்ளியம்மாள் இறந்த பின்பு அவர் வைத்துள்ள நான்கு வைப்பீடு தொகைகளும் எனக்கும், எனது அண்ணன் மனைவிக்கும் சரிபாதி பாத்தியம் உள்ளது என்று தான் வள்ளியம்மாள் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தின்படி கடந்த 19.04.2023 ஆம் தேதி எதிர்மனுதாரர் வங்கியின் வள்ளியம்மாள் டெபாசிட் தொகைகளை உயில் படி நானும், எனது அண்ணன் மனைவி ஆகியோரும் சரிசமமாக பெற்றுக் கொள்வதாக எதிர்மனுதாரருக்கு கடிதம் கொடுத்தோம் என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரருக்கு கடந்த 19.04.2023 ஆம் தேதி கொடுத்த கடிதம் **எ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. மேற்படி உயில் ஆவணத்தின்படி நானும், தமிழரசியும், வள்ளியம்மாள் எதிர்மனுதாரர் வங்கியில்

வைத்துள்ள நான்கு வைப்பீட்டு கணக்குகளில் இரண்டு வைப்பீட்டு கணக்குகளிலிருந்து தொகைகளை பெற்றுக் கொண்டோம் என்றால் சரிதான்.

4. மேற்படி தொகைகளை நான் பெற்றுக் கொண்டதற்கான அபிடவிட் ஆவணம் **எ.ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் தாக்கல் செய்த ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆகிய ஆவணங்களில் வள்ளியம்மாள் பெயரில் உள்ள வைப்பீடு தொகையை எனக்கு மட்டும் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் வாரிசு அடிப்படையில் தான் எனக்கு மட்டும் பணம் கொடுக்க வேண்டும் என்று கோருகிறேன். அதில் தமிழரசி அவர்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று வாய்மொழியாக கூறியுள்ளார். தமிழரசி அவர்களுக்கு எனக்கு மட்டும் தொகையை கொடுப்பதில் எவ்வித ஆட்சேபனை இல்லை என்று எதிர்மனுதாரர் வங்கியில் கடிதம் கொடுத்திருந்தால் எனக்கு மட்டும் தொகையை வழங்க எதிர்மனுதாரருக்கு ஆட்சேபனை இல்லை. மேற்படி வழக்கில் தமிழரசி அவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

5. நான் உயிலின் படி வீட்டையும், நான்கில் இரண்டு டெபாசிட் தொகைகளையும் வாரிசு அடிப்படையில் மீதி இரண்டு டெபாசிட் தொகைகளையும் கோருவது சட்டப்படியானது இல்லை என்றால் சரியல்ல. நான் எ.ம.சா.ஆ.3ல் உயிலின்படி டெபாசிட் தொகையை பெற்றுக் கொள்வதாக கூறிவிட்டு மீதமுள்ள இரண்டு டெபாசிட் தொகைகளை வாரிசு அடிப்படையில் கோருவது சட்டப்படியானது இல்லை என்றால் சரியல்ல. தற்போது எனது அண்ணி அவர்களுடன் பேச்சு வார்த்தை உள்ளது என்றால் சரிதான். அவர் எதிர்மனுதாரர் வங்கிக்கு வந்து எனக்கு மட்டும் மீதமுள்ள டெபாசிட் தொகையை வழங்குவதற்கு தனக்கு ஆட்சேபனை இல்லை என்று கடிதம் எழுதி கொடுக்க அவர் தயாராக உள்ளாரா என்றாலும், தயாராக உள்ளார். நான் பொய்யான தகவலை வங்கியிலும், வழக்கிலும் கூறி இந்த மனு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், நான் தமிழரசி அவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**(எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledge by him/her to be correct

APOORVA S

Digitally signed by APOORVA S
Date: 2026.06.11 17:28:19 +0530

District Munsif,
Palani.